இன்றைய செய்தி நாளைய வரலாறு

கலைஞர் 100 1924 - 2023

# முரசொலி

Murasoli

நிறுவனர் : கலைஞர் மு. கருணாநிதி

www.murasoli.in facebook.com/murasoli180 twitter.com/murasoli180 instagram.com/murasoli180 youtube.com/murasoli180 murasolidaily@gmail.com

தொடக்கம் : 10.8.1942 – முரசு : 81 – ஒலி : 333 – திருவள்ளுவர் ஆண்டு 2054 – ஆனி 28 – வியாழக்கிழமை 13 ஜூலை 2023 – திருச்சி ★★ 10 பக்கங்கள் Established : 10.8.1942 - Volume : 81 - Issue 333 : Thiruvalluvar Year - 2054 - Aani 28 - Thursday 13 July 2023 - Trichy ★★ 10 Pages ₹ 5.00

## நாடாளுமன்றத் தேர்தல் வர இருப்பதால் மிக மிக எச்சரிக்கையுடன் செயல்பட வேண்டும்!

# சட்டம் - ஒழுங்கைப் பேணுவதில் சமரசம் கூடாது!

## காவல்துறை உயர் அதிகாரிகள் ஆய்வுக் கூட்டத்தில் முதல்வர் மு.க.ஸ்டாலின் அறிவுரை!



முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் தலைமையில் நேற்று முன்தினம் (11.07.2023) தலைமைச் செயலகத்தில், மாநிலத்தின் சட்டம் ஒழுங்கு குறித்த ஆய்வுக் கூட்டம் நடைபெற்றது. இக்கூட்டத்தில், தலைமைச் செயலாளர் சிவ்தாஸ் மீனா, உள்துறை முதன்மைச் செயலாளர் திருமதி பெ.அமுதா, காவல்துறை தலைமை இயக்குநர் சங்கர் ஜிவால், சென்னை பெருநகர காவல் ஆணையர் சந்தீப்ராய் ரத்தோர், துறைச் செயலாளர்கள், காவல்துறை மற்றும் அரசு உயர் அலுவலர்கள் கலந்து கொண்டனர்.

**சென்னை, ஜூலை 13 -**

**“புகார்கள் மீது விருப்பு, வெறுப் பின்றி நடவடிக்கை எடுத்து சட்டம், ஒழுங்கைப் பேணுவதில் சமரசம் செய்யக் கூடாது” என்று முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள் காவல்துறை உயர் அதிகாரிகள் ஆய்வுக் கூட்டத்தில் உரையாற்றும் போது அறிவுரை வழங்கினார்.**

முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் தலைமையில் நேற்று முன்தினம் (11.7.2023) தலைமைச் செயலகத்தில், மாநிலத்தின் சட்டம் ஒழுங்கு குறித்த ஆய்வுக் கூட்டம் நடைபெற்றது.

இந்த ஆய்வுக் கூட்டத்தில், முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் ஆற்றிய உரை வருமாறு:-

தமிழ்நாடு அரசின் புதிய தலைமைச் செயலாளராக சிவ்தாஸ் மீனா அவர்களும், தமிழ்நாடு காவல் துறையின் புதிய தலைவராக சங்கர் ஜிவால் அவர்களும், பொறுப்பேற்ற பிறகு நடைபெறும் முதல் ஒருங்கிணைப்புக் கூட்டம் என்பதால் இருவருக்கும் எனது மனமார்ந்த வாழ்த்துகளை நான் முதலில் தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன்.

### போதை மருந்து நடமாட்டத்தை முற்றிலுமாகத் தடுக்க வேண்டும்!

**அனுபவத்தையும் திறமையையும் முழுமையாக பயன்படுத்துக!**

தங்களுடைய அனுபவத்தையும், திறமையையும் முழுமையாகப் பயன்படுத்திப் பணியாற்ற வேண்டும் என்று இருவரையும் நான் கேட்டுக் கொள்கிறேன்.

காவல்துறை மற்றும் அனைத்து அரசுத்துறை செயலாளர்களும் முழுமையான ஒத்துழைப்பு தந்து பணியாற்ற வேண்டும் என்றும் கேட்டுக் கொள்கிறேன்.

தமிழ்நாட்டின் சட்டம் ஒழுங்கு பிரச்சினைகள் குறித்து ஆய்வுக் கூட்டமாக இது ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது. சட்டம் ஒழுங்கு பிரச்சினை என்று சொல்வதால், ஏதோ நிறைய பிரச்சினைகள் இருப்பதாக நீங்கள் கருதத் தேவையில்லை.

சட்டம் ஒழுங்கானது பெரிய அளவில், பிரச்சினைக்குரியதாக இல்லை என்பதுதான் நம்மை மட்டுமல்ல, மக்களையும் மகிழ்வித்து வரக்கூடிய செய்திதான்.

ஒரு அரசு நல்லரசாகச் செயல்படுவதற்கு சட்டம் ஒழுங்கு முறையாக நிலைநிறுத்தப்பட வேண்டும். தமிழ்நாடு இன்று அமைதிப் பூங்காவாகத் திகழ்வதற்கு முக்கியமான காரணம், நமது அரசு சட்டம்ஒழுங்கிற்குக் கொடுத்து வரக்கூடிய முக்கியத்துவம்தான். சட்டம் ஒழுங்கை முறையாக கடைப்பிடித்து வருகிறோம் என்பதன் அடையாளம்தான் கடந்த இரண்டு ஆண்டுகளில் மேற்கொள்ளப்பட்ட பல்வேறு வளர்ச்சித் திட்டங்கள்.

நிம்மதியும், அமைதியும் இருக்கும் மாநிலத்தில்தான் நினைத்த திட்டங்களை செயல்படுத்த முடியும். அந்த வகையில் மிக மிக நிறைவான காலமாக இந்த இரண்டு ஆண்டு காலம் அமைந்துள்ளது. இதற்குக் காரணமான காவல்துறை அதிகாரிகள், அலுவலர்கள், காவலர்கள் அனைவருக்கும் எனது நன்றியை நான் தெரிவித்துக் கொள்ள விரும்புகிறேன்.

**காவல்துறையின் செயல்பாடுகள் சிறப்பாக உள்ளது!**

இன்று மேற்கொள்ளப்பட்ட ஆய்வில், கடந்த ஆறு மாதங்களில் காவல்துறையின் செயல்பாடுகள் மற்றும் குற்ற வழக்குகள், சட்டம் ஒழுங்கு குறித்த நிலவரங்கள் பற்றி விவாதிக்கப்பட்டது. காவல்துறையின் செயல்பாடுகள் மிக மிக திருப்திகரமாக உள்ளது. என்றாலும், அடுத்து வரும் ஓராண்டுகாலம் நமக்கு மிகவும் முக்கியமானதாகும். இக்காலத்தில் காவல்துறையின் செயல்பாடுகள் மேலும் சிறப்பாக அமைவதற்கு பின்வரும் நடவடிக்கைகளை மேற்கொள்ளுமாறு நான் அறிவுறுத்த விரும்புகிறேன்.

சட்டம் ஒழுங்கு பிரச்சினைகள் கண்டறியப்பட்டவுடன் முறையாக முளையிலேயே கிள்ளி எறியப்பட வேண்டும்.

எக்காரணத்தைக் கொண்டும் அவை மக்களுக்கு பிரச்சினைகளை ஏற்படுத்தும் வண்ணம் பெரிய நிகழ்வுகளாக உருமாறுவதை தவிர்க்க வேண்டும்.

அடுத்த ஓராண்டு காலத்திற்கு மக்களை பாதிக்கும் எந்த ஒரு சட்டம் ஒழுங்கு பிரச்சினையும் ஏற்படாத வண்ணம் உறுதி செய்ய வேண்டும்.

நாடாளுமன்றத் தேர்தல் வர இருப்பதால், மிக மிக எச்சரிக்கையுடன் காவல்துறை அதிகாரிகள் அனைவரும் செயல்பட வேண்டும்.

குற்றம் சாட்டப்பட்டவர்கள் காவல் நிலையத்தில் விசாரிக்கப்படும் போது, கண்ணியத்துடன் நடத்தப்படவேண்டும். அவர்களை எந்த விதத்திலும் துன்புறுத்தக்கூடாது. காவல் மரணங்கள் முழுமையாகத் தடுக்கப்பட வேண்டும்.

நமது அரசு, பெண்கள் மற்றும் குழந்தைகளின் பாதுகாப்பில் எப்பொழுதுமே சிறப்புக் கவனம் செலுத்தி வருகிறது.

இந்தியாவிலேயே நமது மாநிலத்தில்தான் பெண் குழந்தைகள் அதிகமாக பள்ளிக்கும், கல்லூரிக்கும் சென்று வருகிறார்கள். அதேபோல வேலைக்குச் செல்லும் பெண்களும் நாட்டிலேயே நமது மாநிலத்தில்தான் அதிகமாக இருக்கிறார்கள்.

கல்விக் கூடங்கள், பணியிடங்கள் மற்றும் பொது இடங்களில் பெண்கள் மற்றும் குழந்தைகளின் பாதுகாப்பை உறுதி செய்வது நம்முடைய தலையாய கடமை.

**புகார்கள் மீது உடனடி நடவடிக்கை வேண்டும்!**

பொதுமக்கள் மற்றும் பெண்களிடமிருந்து பெறப்படும் ஒவ்வொரு புகாரின் மீதும் உடனடியாக நடவடிக்கை எடுத்து சம்பந்தப்பட்ட குற்றவாளிகளை சட்டத்தின் முன் நிறுத்தி அவர்கள் தண்டனை பெறுவதை உறுதி செய்ய வேண்டும்.

தொடர்ச்சி 3 ஆம் பக்கம்

---

### தமிழ்நாட்டில் அரசு, மக்கள் நலன் சார்ந்த

## பல்வேறு திட்டங்களை முதல்வர் மு.க.ஸ்டாலின் செயல்படுத்தி வருகிறார்!

### “மலையாள மனோரமா” பத்திரிகை பாராட்டு!

திருவனந்தபுரம், ஜூலை 13 -

கேரளாவின் பிரபல பத்திரிகையான மலையாள மனோரமா தீட்டியுள்ள தலையங்கத்தில், கொரோனா எனும் பெருந்தொற்று தமிழ்நாட்டை உலுக்கி, மூச்சு முட்டும் நேரத்தில் தான் தி.மு.க. அரசு பதவி ஏற்றது என்றும், கொரோனாவால் தொழில் துறையும், பொருளாதாரமும் சிதைந்து காலியான கஜானாதான் கையில் கிடைத்தது என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

தமிழ்நாட்டிற்கு சிறிது சிறிதாக வெளிநாட்டு முதலீடுகளை கொண்டு வர முயற்சித்தும், தொழில் முதலீடுகளை தொடங்கியும் மாநிலத்தை அனைவரும் திரும்பிப் பார்க்கும் நிலைமைக்கு உயர்த்தியதில், முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்களின் செயல்பாடு மிக முக்கியமானது என்று மலையாள மனோரமா குறிப்பிட்டுள்ளது.

முதலமைச்சராக மு.க.ஸ்டாலின் அவர்கள் பொறுப்பேற்றதும் முதலில் கையெழுத்திட்டது பெண்களுக்கு அரசு பேருந்துகளில் இலவச பயணத் திட்டம், ஆவின் பால் விலை குறைப்பு ஆகியவை என்றும் குறிப்பிட்டுள்ள மலையாள மனோரமா, இவை குடும்ப பெண்களுக்கிடையே பெரும் வரவேற்பை பெற்று முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்களுக்கு நற்பெயரை ஏற்படுத்தி கொடுத்ததாகவும் தெரிவித்துள்ளது. பள்ளிகளில் காலை உணவுத் திட்டம், உயர் கல்வி பயிலும் மாணவிகளுக்கு மாதம் ஆயிரம் ரூபாய் வழங்கும் புதுமைப் பெண் ஆகிய திட்டங்களும் நல்ல வரவேற்பை பெற்றுள்ளது. இதன் தொடர்ச்சியாக குடும்பத்தலைவிகளுக்கு மாதம் 1000 ரூபாய் உரிமைத் தொகை வழங்கும் கலைஞர் மகளிர் உரிமைத் திட்டம் செப்டம்பர் 15 முதல் தொடங்கப்பட உள்ளது என்று மலையாள மனோரமா பத்திரிகை பாராட்டு தெரிவித்துள்ளது.

ஆட்சிக்கு வந்த 9 மாதங்களில் உள்ளாட்சித் தேர்தல், ‘உள்ளாட்சியிலும் மலரட்டும் நல்லாட்சி’ என்ற அழைப்பை மக்கள் ஏற்று செயல் படுத்தினார்கள். சட்டமன்ற தேர்தலில் 67% இடங்களில் வெற்றிபெற்ற, திமுக உள்ளாட்சி தேர்தலில் 80% வார்டுகளில் வெற்றிபெற்றதாகவும் மலையாள மனோரமா தெரிவித்துள்ளது. ஈரோடு கிழக்கு சட்டமன்ற இடைத் தேர்தலில் முன்பை விட மூன்று மடங்கு அதிக பெரும்பான்மை வாக்குகளோடு கூட்டணி கட்சியின் காங்கிரஸ் வேட்பாளர் வெற்றி பெற்றார் என்றும் மலையாள மனோரமா தலையங்கத்தில் குறிப்பிடப்பட்டுள்ளது.

கடந்த முறை கைவிட்டுப்போன ஒரு மக்களவை இடத்தையும் சேர்த்து 40 தொகுதிகளையும் கைப்பற்றுவதே தி.மு.க.வின் குறிக்கோள் என்றும், பா.ஜ.க.வை வீழ்த்த எதிர்க் கட்சிகளை ஓரணியில் திரட்டுவதில் முன்னின்று செயலாற்றி வருபவர் முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள்தான் என்றும் மலையாள மனோரமா தெரிவித்துள்ளது.

---

### ஆளுநர் ஆர்.என்.ரவியை நீக்க வேண்டும் என்று

## முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் வலியுறுத்தியது சரியானதே!

### மூத்த வழக்கறிஞர் கபில்சிபல் தகவல்!



*புதுடெல்லி, ஜூலை 13-*

*தமிழ்நாடு ஆளுநர் ஆர்.என்.ரவியை பதவி நீக்கம் செய்யவேண்டும் என்று முதலமைச்சர் மு.க. ஸ்டாலின் அவர்களின் கோரிக்கைக்கு மூத்த வழக்கறிஞர் கபில் சிபல் எம்.பி. ஆதரவு தெரிவித்துள்ளார். முதல்வர் மு.க.ஸ்டாலின் அவ்வாறு கேட்டிருப்பது சரியானது தான் என்று அவர் குறிப்பிட்டுள்ளார்.*

*எதிர்க்கட்சிகள் ஆளும் மாநிலங்களில் உள்ள ஆளுநர்கள் அம்மாநிலங்களின் நடவடிக்கைகளில் தேவையின்றி தலையிட்டு சீர்குலைக்கும் முயற்சியில் ஈடுபட்டு வருகிறார்கள் என்று குற்றஞ்சாட்டும் கபில்சிபல் தமிழ்நாடு ஆளுநர் ஆர். என்.ரவியை நீக்க வேண்டும் என்கிற கோரிக்கைக்கு ஆதரவு தெரிவித்துள்ளார்.*

*தமிழ் நாட்டின் ஆளுநர் சமூக நல்லிணக்கத்துக்கு எதிராக செயல்பட்டு சனாதன தர்மத்தை வலியுறுத்தி, தமிழ் நாட்டில் நிலவும் அமைதியை அச்சுறுத்தும் போக்கில் செயல்படுகிறார், அந்த வகையில் அவர் ஆளுநர் பதவியில் இருந்து நீக்குவதற்கு தகுதிவாய்ந்தவராக இருக்கிறார் என்று நீண்ட கடிதம் ஒன்றை குடியரசுத் தலைவருக்கு முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள் அண்மையில் அனுப்பி இருந்தார்.*

*இதன் தொடர்ச்சியாக மூத்த வழக்கறிஞர் கபில் சிபல் அவர்கள், ஆளுநர்கள் பற்றி அண்ணல் அம்பேத்கர் சொன்னதை குறிப்பிட்டுள்ளார்.*

*ஆளுநர்களின் நடவடிக்கைகள் என்பது முழுக்க முழுக்க அலங்காரமானது தான். நிர்வாக நடவடிக்கைகளில் தலையிட அவர்களுக்கு அதிகாரமில்லை என்பதை பதிவிட்டுள்ளார்.*

*எதிர்க்கட்சிகள் ஆளும் மாநிலங்களில் உள்ள ஆளுநர்கள் ஒன்று இந்துத்துவாக் களையே வலியுறுத்துகிறார்கள். இரண்டாவது நிர்வாகத்தை சீர்குலைக்கும் நடவடிக்கையில் இறங்குவது, தலையிடுவது, மூன்றாவது வெறுப்புணர்வை தூண்டிவிடுவது என இத்தகைய செயல்களில்தான் ஈடுபட்டு வருகிறார்கள்.*

*எனவே ஆளுநர் ரவியை நீக்க வேண்டும் என்று முதல்வர் முக.ஸ்டாலின் சொல்வது சரியானதே.*

*இவ்வாறு மூத்த வழக்கறிஞர் கபில் சிபல் தெரிவித்துள்ளார்.*

---

### விரைவில் பொறியியல் கலந்தாய்வு!

*சென்னை, ஜூலை 13 -*

*சென்னை தலைமைச் செயலகத்தில் செய்தியாளர்களைச் சந்தித்த உயர் கல்வித்துறை அமைச்சர் பொன்முடி, பொறியியல் படிக்கும் மாணவர்களுக்கு தொழிற்சாலை பயிற்சி அளிக்க வேண்டும் என முதலமைச்சர் மு.க. ஸ்டாலின் குறிப்பிட்டிருந்தார். அதன்படி, முதலமைச்சரின் அறிவுறுத்தலின் படி, கோவை அரசு பொறியியல் கல்லூரியில் மாணவர்களுக்கு பயிற்சி அளிப்பதற்கு வால்மார்ட் நிறுவனத்துடன் புரிந்துணர்வு ஒப்பந்தம் போடப்பட்டுள்ளதாக கூறினார். பொறியியல் கலந்தாய்வு விரைவில் நடத்தப்பட்டு கல்லூரிகள் திறக்கப்படும் என்றும், மாநில கல்விக் கொள்கையை உருவாக்குவதற்கான பணிகள் நடைபெற்று வருவதாகவும் அதன் அறிக்கை விரைவில் தாக்கல் செய்யப்படும் என கூறினார்.*

---

### ஜம்மு-காஷ்மீருக்கு சிறப்பு அந்தஸ்து ரத்து செய்தது சரியா?

## ஆக.2 முதல் தினந்தோறும் விரிவான விசாரணை!

### உச்சநீதிமன்றம் உத்தரவு!

ஸ்ரீநகர், ஜூலை 13 –

ஜம்மு – காஷ்மீர் மாநிலத்திற்கான சிறப்பு அந்தஸ்து வழங்கும் 370வது சட்டப்பிரிவை கடந்த 2019ம் ஆண்டு ஆகஸ்ட் 5ஆம் தேதி ஒன்றிய பா.ஜ.க. அரசு நீக்கியது. மேலும் ஜம்மு – காஷ்மீர் மற்றும் லடாக் என இரண்டு யூனியன் பிரதேசங்களாகப் பிரித்தது. இதற்கான மசோதாவை, எதிர்க்கட்சிகளின் கடும் எதிர்ப்பை மீறி, எந்த விவாதமும் நடத்தாமல் நாடாளுமன்றத்தில் ஒன்றிய பா.ஜ.க. அரசு நிறைவேற்றியது.

பா.ஜ.க. அரசின் இந்த நடவடிக்கையை எதிர்த்து, பல்வேறு அரசியல் கட்சியினரும், அமைப்புகளும் உச்சநீதிமன்றத்தில் வழக்குகள் தொடர்ந்தன. மொத்தம் 23 மனுக்கள் தாக்கல் செய்யப்பட்டன. முதல் முறையாக 2019 டிசம்பரில் நீதிபதி என்.வி. ரமணா தலைமையிலான 5 நீதிபதிகள் கொண்ட அமர்வில் இந்த மனுக்கள் விசாரணைக்கு வந்த போது 7 நீதிபதிகள் கொண்ட அமர்விற்கு வழக்கை மாற்றுமாறு மனுதாரர்கள் முறையிட்டனர்.

ஆனால் 2020 மார்ச்சில் வழங்கப்பட்ட உத்தரவில் 5 நீதிபதிகள் கொண்ட அமர்விலேயே வழக்கு நடைபெறும் என என்.வி. ரமணா அறிவித்தார். அதன் பிறகு என்.வி. ரமணா, யு.யு லலித் ஆகியோர் அடுத்தடுத்து தலைமை நீதிபதிகளாக பதவியேற்று ஓய்வும் பெற்ற நிலையில் இந்த வழக்கு விசாரணைக்கு பட்டியலிடப் படாமலேயே இருந்தது.

இந்நிலையில் உச்சநீதிமன்ற தலைமை நீதிபதி சந்திரசூட் தலைமையில் நீதிபதிகள் சஞ்சய் கிஷன் கவுல், சஞ்சீவ் கண்ணா, பிஆர் கவாய், சூர்ய காந்த் ஆகியோர் அடங்கிய 5 நீதிபதிகள் கொண்ட அரசியல் சாசன அமர்வு முன்பு நேற்று முன்தினம் விசாரணைக்கு வந்தது. அப்போது ஜம்மு – காஷ்மீருக்கான சிறப்பு அந்தஸ்து ரத்துக்கு எதிரான வழக்குகள் ஆகஸ்ட் 2ம் தேதி முதல் திங்கள் மற்றும் வெள்ளிக் கிழமைகளை தவிர்த்து தினசரி விசாரிக்கப்படும் என்று நீதிபதிகள் அறிவித்தனர்.

ஜூலை 25ஆம் தேதிக்குள் மனுதாரர்கள் அனைவரும் அனைத்து ஆவணங்களையும், பதில் மனுக்களையும் தாக்கல் செய்ய வேண்டும் என்றும், வாதங்கள் தொடங்குவதற்கு முன்பு, அனைத்து நடவடிக்கைகளையும் முடிக்க வேண்டும் என்றும் உச்சநீதிமன்றம் உத்தரவிட்டுள்ளது.